ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன் ஏற்பாட்டில்! என்.கௌதம் முன்னிலையில்!

# கீழையூர் கிழக்கு ஒன்றியத்தில் 200 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## இரா.மாரிமுத்து, மரியசார்லஸ். என்.மோகன்தாஸ், பூவை ஆர்.ஜி.முருகு பங்கேற்பு!

நாகை, அக். 9 -

நாகை மாவட்டம் கீழையூர் கிழக்கு ஒன்றியம் பிரதாமராம புரம் ஊராட்சியில் உள்ள செருதூர் மீனவ கிராமம், கிடங்கு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 200 குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கீழையூர் கிழககு ஒன்றியக் கழகச் செயலாளரும், வேளாங்கண்ணி பேரூராட்சி துணைத்தலைவர் ஆ.தாமஸ்ஆல்வா எடிசன் ஏற்பாட்டில் அக் கட்சிகளில் இருந்து விலகி தி.மு.க. வில் இணையும் நிகழ்ச்சி நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. விழாவிற்கு கீழையூர் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளரும், வேளாங்கண்ணி பேரூராட்சி துணைத் தலைவருமான ஆ.தாமஸ் ஆல்வா எடிசன் தலைமை தாங்கினார். நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரியசார்லஸ், மாவட்ட தொழிலாளர் அணி தலைவர் என்.மோகன்தாஸ், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் பூவை ஆர்.ஜி. முருகு ஆகியோர் முன்னிலை வகித்தனர். பிரதாமராம புரம் முன்னாள் ஊராட்சி செயலாளர் இராம.கணபதி வரவேற்றார். நிகழ்ச்சியில் அ.தி.மு.க. ஓ.பன்னீர்செல்வம் அணி, அ.தி.மு.க. பாட்டாளி மக்கள் கட்சி, பா.ஜ.க. ஆகிய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அ.தி.மு.க. ஓ.பன்னீர்செல்வம் அணியின் ஒன்றிய செயலாளர் முருகானந்தம் (ஏ) சண்முகநாதன், பா.ம.க. கிளை செயலாளர் மகேந்திரன், அ.தி. மு.க. கிளை துணைச் செயலாளர் என்.எல்லப்பன், அ.தி.மு.க. கிளை பொருளாளர் ஆர்.தமிழ்மணி ஆகியோர் தலைமையில் தலைமையில் 200 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அக் கட்சிகளில் இருந்து விலகி நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

கழகத்தில் இணைந்தவர்களுக்கு இரு வண்ண கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டு கழகத்தில் இணைத்துக் கொள்ளப் பட்டது. நிகழ்ச்சியில் மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் பால.முரளி, துணை அமைப்பாளர் பி.தேவராஜ், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் குலோத்துங்கன், ஒன்றிய இளைஞர் அணி புகழேந்திரன், செருதூர் ஏ.கணபதி, பி.சுந்தராஜ், ஒன்றிய மீனவர் அணி அமைப்பாளர் கே.சிவப்பிரகாசம், அணி துணை அமைப்பாளர் பி.சுந்தராஜ், மற்றும் பி.அர்சுணன், என்.சந்திரன், ஒன்றிய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எம்.இரத்தின குமார், ஒன்றிய தொண்டர் அணி துணை அமைப்பாளர் எஸ்.ரஞ்சித், ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் எஸ். மதன், கிளை கழக நிர்வாகிகள் பி.துரைராஜ், எஸ்.நந்தகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தத்துவமேதை **டி.கே.சீனிவாசன்**

**35வது ஆண்டு நினைவு வணக்கம்**



தோற்றம் 14.11.1922

மறைவு 9.10.1989

*என்றும் தங்கள் வழி நடக்கும்*

**டி.கே.எஸ்.இளங்கோவன்**, Ex. M.P., **நளினி**
(செய்தி தொடர்பு குழு தலைவர், தி.மு.க.)

**டி.கே.எஸ்.மணிவண்ணன்** **குணபூஷணி**

**டி.கே.எஸ்.தமிழ்ச்செல்வி** **எஸ்.தமிழ்மணி**

**திருமதி கீதாலட்சுமி வில்லாளன்**

திருமதி. மாதவி – ஜான் விஜய்,

திருமதி. இ.தரணி – எஸ்.ராகவேந்திரமூர்த்தி,

சீனிவாசன், மேகலா, பரிதி ஈசா,

2025ஆம் ஆண்டு! 2ஆம் நாளான திருவள்ளுவர் திருநாளில்

# ‘முத்தமிழறிஞர் கலைஞர் விருது’ வழங்கப்படுகிறது!

## விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன! தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, அக்.9 -

2025-ஆம் ஆண்டு, 2-ஆம் நாளான திருவள்ளுவர் திருநாளில் புதியதாக “முத்தமிழறிஞர் கலைஞர் விருது” வழங்கப்படவிருக்கிறது. இவ் விருதுக்கு தமிழுக்கு தொண்டாற்றியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப் படுகின்றன என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

தமிழினத் தலைவர் என்று உள்ளத்தின் மொழியால் அன்பாக அழைக்கப்படும் தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தமிழ்த் திருப்பணிகளை போற்றும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அடியொற்றித் தாய்த்தமிழுக்குத் தொண்டாற்றும் அறிஞர் ஒருவருக்கு ‘முத்தமிழறிஞர் கலைஞர் விருது‘ என்ற புதிய விருது தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

தகைமையும் பெருமையும் உடைய இவ்விருது பெறும் அறிஞருக்கு விருதுத் தொகையாக ரூபாய் பத்து இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், பொன்னாடை, தகுதியுரை ஆகியன வழங்கிச் சிறப்பிக்கப்பெறும் என 2024 - 2025ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2025ஆம் ஆண்டு 2ஆம் நாளான திருவள்ளுவர் திருநாளில் வழங்கப்படும் திருவள்ளுவர் விருது, பேரறிஞர் அண்ணா விருது, பெருந்தலைவர் காமராசர் விருது, மகாகவி பாரதியார் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, திரு.வி.க. விருது, கி.ஆ.பெ. விசுவநாதம் ஆகிய விருதுகளோடு புதிய விருதான முத்தமிழறிஞர் கலைஞர் விருதையும் இணைந்து வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

முத்தமிழறிஞர் கலைஞர் அடியொற்றி தமிழுக்குத் தொண்டாற்றிய தகைமையும் தொண்டறமும் பூண்ட பெருமக்களிடமிருந்து விண்ண ப்பங்கள் வேண்டப்படுகின்றன.

www.tamilvalarchithurai.tn.gov.in/awards மற்றும் http://awards.tn.gov.in என்ற இணைய தளங்களின் வழியாகவோ அல்லது www.tamilvalarchithurai.tn.gov.in என்ற இணையதள முகவரியின் வாயிலாக விண்ணப்பங்களைப் பதிவிறக்கம் செய்து, அவற்றை நிறைவு செய்து தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், தமிழ்ச்சாலை, எழும்பூர், சென்னை-600 008 என்ற முகவரிக்கு அஞ்சல் வாயிலாக 30.10.2024-ஆம் நாளுக்குள் தக்க ஆவணங்களோடு விண்ணப்பங் களை அனுப்பிட வேண்டுகின்றோம்.

கூடுதல் விவரமறிய விரும்புவோர் 044-28190412, 044-28190413 ஆகிய தொலைபேசி எண்களை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம். உரிய நாளுக்குள் (30.10.2024) பெறப்படும் விண்ணப் பங்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது.

**11 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி**



தோற்றம் 18.09.1937

மறைவு 09.10.2013

**சேப்பாக்கம் க.சந்தானகிருஷ்ணன்**

( முன்னாள் தலைமை பொதுக்குழு உறுப்பினர் & 48 ஆண்டுகள் வட்ட கழக செயலாளர் )

எங்கள் உயிரில் கலந்த உங்கள் நினைவுகளோடு...

தலைவர் தளபதி அவர்களின் வழியில் திராவிடத்தின் விழுதுகளாய்...

மகன்கள் : **ச.அம்மையப்பன் ச.ராஜேந்திரன் ச.கலைச்செல்வன் ச.மதிவாணன் ச.கரிகாலன்**

மகள், மருமகன் : **ச.ரதி க.ராஜசேகர்**

மருமகள்கள் **புவனேஸ்வரி** அம்மையப்பன் **புவனேஸ்வரி** ராஜேந்திரன் **தனலட்சுமி** கலைச்செல்வன் **சுதா** மதிவாணன் **ஷர்மிளா** கரிகாலன்

பெயரன்கள் கலாநிதி ராஜா அம்மையப்பன் நிரஞ்சன் ராஜசேகர் அஷ்வின் ராஜேந்திரன் ராகவ் ராதாகிருஷ்ணன் கரிகாலன்

பெயர்த்திகள் ஷாலினி அம்மையப்பன் காவ்யா மதிவாணன் அக்ஷயா மதிவாணன்

ராதா சந்தானகிருஷ்ணன் நினைவு அறக்கட்டளை, சென்னை


மக்களுக்கு தொண்டு செய்வதில்
மனமுவந்து முன்நிற்கும்

**எங்கள் துணை முதலமைச்சர்**

*அவர்களை வாழ்த்தி வணங்குகிறேன்!*

**டி.ஆர்.பாலு** எம்.பி., கழக பொருளாளர்

**பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன்**
மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர்

**வி.செந்தில்பாலாஜி**
மாண்புமிகு மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர்

**டி.ஆர்.பி.ராஜா**
மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்

**அன்பில்மகேஸ் பொய்யாமொழி**
மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்

**மு.பெ.சாமிநாதன்**
மண்புமிகு செய்தித்துறை அமைச்சர்

**மா.சுப்பிரமணியன்**
மாண்புமிகு மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

முனைவர் **கோ.வி.செழியன்**
மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர்

**தயாநிதிமாறன்** எம்.பி
விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர்

**எஸ்.எஸ்.பழனிமாணிக்கம்**
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்

**சு.கல்யாணசுந்தரம்** எம்.பி
தஞ்சை வடக்கு மாவட்ட செயலாளர்

**முரசொலி**
நாடாளுமன்ற உறுப்பினர்

**எஸ்.ஜோயல்**
மாநில இளைஞர் அணி துணை செயலாளர்

**நே.சிற்றரசு**
சென்னை மேற்கு மாவட்ட செயலாளர்

**துரை.சந்திரசேகர்**
தஞ்சை மத்திய மாவட்ட செயலாளர்

**நீலமேகம்**
தஞ்சை சட்டமன்ற உறுப்பினர்

**சண் ராமநாதன்**
மேயர்




கலைஞர்

அன்புடன் : தஞ்சை **ஜோ.ஜீவா**

தலைவர் – தமிழ்நாடு கேபிள் டிவி ஆப்ரேட்டர்கள் மற்றும் தொழிலாளர்கள் நலவாரியம்